காலை முரசு

பக்கங்கள்:-25

## சி.ஐ.டியின் 4ஆம் மாடி சித்திரவதை முகாம்!

### புதிய சட்டவரைவு குறித்து முன்னாள் அமைச்சர் சாடல்



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நான்காம் மாடியானது ஒரு சித்திரவதை

06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 30 | வெள்ளிக்கிழமை | 13.02.2026 | அதிர்வு 197






### நாடாளுமன்றத்தின் கௌரவத்தைக் காக்க

# சபாநாயகர் உடனடியாக பதவி விலக வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி இடித்துரைப்பு

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமாயின், அவர் உடனடியாகத் தனது பதவியிலிருந்து விலக வேண்டும் எனப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

06

# எதிரணியின் குற்றச்சாட்டுகள் அரசியல் காழ்ப்புணர்ச்சியே!

## சபாநாயகருக்கு அரசு முண்டுகொடுப்பு

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் எவ்வித அடிப்படை ஆதாரமும் அற்றவை எனவும், அவை அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தூண்டப்பட்டவை எனவும் அரசு பதிலடி கொடுத்துள்ளது.

"தற்போதைய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன மிகவும் மோசமான முறையில் ஆளுங்கட்சிக்குச் சார்பாகச் செயற்பட்டு வருகின்றார். அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமாயின், அவர் உடனடியாகத் தனது பதவியிலிருந்து விலக வேண்டும்" என்று

06






பல்வேறு அழுத்தங்கள், நெருக்குவாரங்கள், அவதூறுப் பிரசாரங்கள், அபவாத தூற்றல்கள், அடாவடி அச்சுறுத்தல்கள் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டபடி தமது இரண்டாவது பதவிக் காலத்தின் அந்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா. இன்னமும் சுமார் ஒன்றரை மாத காலம் கூட அவரது இரண்டாவது பதவி காலத்தில் இல்லை.

ஆயினும், அதற்கு முன்னர் ஒரு நாளாவது பதவியில் இருந்து முற்கூட்டியே அவரை இடைநிறுத்தி அல்லது வெளியேற்றி 'அழகு பார்க்க' அவரது நிர்வாக ரீதியான எதிராளிகள் முனைப்புடன் அவசரப்படுகின்றார்கள் என அறிய வருகிறது.

பேராசிரியர் சிறிசற்குணராஜாவுக்கு இரண்டாவது பதவிக்காலத்திற்கு வழங்கப்பட்ட பதவி இந்த வருடம் ஓகஸ்ட் 28 வரை உள்ளது. ஆனால் வரும் மார்ச் 25ஆம் திகதி அவருக்கு

06




# சுவிஸ் தூதரக முயற்சியை தடுத்தது நாங்கள் இல்லை

## சுமந்திரன் மீது கஜேந்திரகுமார் பகிரங்கக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரட்டும் சுவிட்சர்லாந்து தூதரகத்தின் முயற்சியைத் தடுக்கும் நோக்கம் எமக்கில்லை எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**தூதரக சந்திப்பு ஒத்திவைப்புக்கான பின்னணி**

"தமிழ்த் தேசியப் பேரவை எதிர்வரும் 15ஆம் திகதி சிவில் அமைப்புகளுடன் நடத்தவுள்ள சந்திப்பால், சுவிஸ் தூதரகத்தின் 19ஆம் திகதி முயற்சி கைவிடப்பட்டதா என நான் தூதரகத்திடம் வினவினேன். ஆனால், சந்திப்பு குறித்த செய்தி ஊடகங்களில் வெளியானதால் அதன் இரகசியத் தன்மை பாதிக்கப்படலாம் எனக் கருதியே தமிழ்க் கட்சிகள் தரப்பில் தயக்கம் காட்டப்பட்டதே தவிர, இதில் தமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனத் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

**சுமந்திரன் மீதான குற்றச்சாட்டு**

எனது கோரிக்கையின் பேரிலேயே சுவிஸ் தூதரகம் இந்த முயற்சியை முன்னெடுப்பதாகக் கூறப்படும் தகவல் முற்றிலும் பொய்யானது. உண்மையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கேட்டுக்கொண்டமைக்கு இணங்கவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. 15ஆம் திகதி நாம் நடத்தவுள்ள சந்திப்பைக் குழப்புவதற்காகவே தமிழரசுக் கட்சியினர் இத்தகைய வதந்திகளைப் பரப்புவதாக நான் சந்தேகிக்கின்றேன்.

**ஏக்கிய இராச்சிய அரசமைப்புச் சதி**

அரசு தற்போது "ஏக்கிய இராச்சிய" (ஒற்றையாட்சி) அரசமைப்பைத் தமிழர்களுக்குத் தீர்வாகத் திணிக்க முயன்று வருகின்றது. நாடாளுமன்றத்தில் அவர்களுக்குள்ள பலத்தைப் பயன்படுத்தி இதனை நிறைவேற்ற முடியும். inthach சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று பலமான தீர்மானத்தை எடுக்காவிட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது.

நாம் 2024ஆம் ஆண்டிலிருந்தே இந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம். 19ஆம் திகதி சந்திப்பில் பங்கேற்கத் தயாராக இருக்கும் தமிழரசுக் கட்சியினரால், ஏன் 15ஆம் திகதி சிவில் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் கலந்துகொள்ள முடியாது?

**சர்வதேசத்தின் பார்வை**

2029ஆம் ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட வாய்ப்புள்ளது. தமிழர்களின் ஆதரவுடன் ஒற்றையாட்சி அரசமைப்பு ஏற்கப்பட்டால், அதன் பின்னர் தமிழர்களுக்கு இனப்பிரச்சினை ஒன்று இருப்பதாகச் சர்வதேசத்திடம் முறையிடக்கூட முடியாத நிலை ஏற்படும். இந்தச் சதியை முறியடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்." - என்றார்.

# 'சங்கு' கூட்டணியின் பேராளர் மாநாடு சாவகச்சேரியில் பெப்ரவரி 22ஆம் திகதி

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 5 தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் இந்தக் கூட்டணி, தனது எதிர்கால அரசியல் நகர்வுகள் மற்றும் கொள்கை விளக்கங்களை முன்வைக்கும் நோக்கில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மாநாட்டில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன்



(புளொட்), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்), ந.சிறீகாந்தா (தமிழ்த் தேசியக் கட்சி) மற்றும் சி.வேந்தன் (ஜனநாயகப் போராளிகள் கட்சி) உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் கூட்டணியின் சார்பில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் வெற்றிபெற்ற பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பல தரப்பினர் கலந்துகொள்ளவுள்ளனர்.

### வாகனத்தின் சக்கரத்தைச் சுடாமல் உயிரைப் பறிப்பதா?

# அல்லைப்பிட்டி மரணத்துக்கு பொலிஸாரே முழுக்காரணம்

## சிரேஷ்ட சட்டத்தரணி சிறீகாந்தா கடும் கண்டனம்



யாழ். அல்லைப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம், பொலிஸாரின் கண்மூடித்தனமான மற்றும் பொறுப்பற்ற நடவடிக்கையாலேயே நிகழ்ந்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரான சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

இந்த உயிரிழப்புக்கு பொலிஸாரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

**தவறான துப்பாக்கிப் பிரயோகம்**

“அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார். அந்தச் சிறுவன் சந்தேகத்துக்கிடமான வகையில் வாகனத்தைச் செலுத்திச் சென்றிருந்தாலும், அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதற்குப் பொலிஸாருக்கு எந்தவிதமான சட்ட அதிகாரமும் இல்லை.

ஒரு வாகனத்தை நிறுத்த வேண்டிய தேவை பொலிஸாருக்கு ஏற்பட்டிருப்பின், அவர்கள் வாகனத்தின் சக்கரங்களை நோக்கி மட்டுமே துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்க வேண்டும். அதை விடுத்து, ஒரு உயிரைப் பறிக்கும் வகையில் செயற்பட்டது கண்டிக்கத்தக்கது.

**சட்ட நடவடிக்கை தேவை**

“இந்தத் துயரமான மரணம் குறித்து முழுமையான மற்றும் நடுநிலையான விசாரணைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஒரு சிறுவனின் மரணத்துக்குக் காரணமான பொலிஸார் எவராக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.” – என்று அந்த அறிக்கையில் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

### மாகாண சபைத் தேர்தலை உடனே நடத்துக!

# தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையே தீர்வு

## யாழில் இன்று ஐக்கிய சோசலிசக் கட்சி விசேட கூட்டம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குச் சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பான விசேட கூட்டமொன்றை அக்கட்சி இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூரில் நடத்துகின்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

மேற்படி கூட்டத்தில் வலியுறுத்தப்படவுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

**கௌரவமான அரசியல் தீர்வு**

தமிழ் மக்களுக்கு கௌரவமான மற்றும் நீதியான அரசியல் தீர்வை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாகாண சபைத் தேர்தல்**

நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்தி, மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

**மீனவர் பிரச்சினைகள்**

வடக்கு கடற்பரப்பில் மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினை மற்றும் வடக்கு மக்களின் வாழ்வாதார உரிமைகள் குறித்து இந்தக் கூட்டத்தின் போது ஐக்கிய சோசலிசக் கட்சி தனது தெளிவான நிலைப்பாட்டை இடித்துரைக்கவுள்ளது.


மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் சதித்திட்டத்தை முறியடிப்போம்!

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களையும் அடக்குமுறைச் சட்டங்களையும் ரத்து செய் !

கூட்டம்

யாழ்ப்பாணம்

திவ்ய ஜீவன சங்கம்,

நல்லூர்

பிப்ரவரி 13 வெள்ளிக்கிழமை

மாலை 4.00

முக்கிய பேச்சாளர்

சிறிதுங்க ஜயசூரிய

வடக்கு மீனவ சமூகத்தின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வை !

சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வை!

ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி




# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நிபந்தனைகளுடன் மலையகக் காணி உரிமையையும் இணைக்கவும்!

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் மனோ கணேசன் வலியுறுத்து

இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையைத் தனது கட்சி ஆதரிக்கின்றது என்றும், எனினும் இந்த முன்னுரிமைச் சலுகையானது மலையகத் தமிழர்களின் காணி உரிமை மற்றும் கண்ணியமான குடியுரிமை உரிமைகளை உறுதிப்படுத்தும் நிபந்தனைகளுடன் இணைக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்திய இயக்குநர் பவுலா பம்பலோனி தலைமையிலான உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினை-ரச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரேனோவின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பேராசிரியர் விஜயசந்திரன் மற்றும் பரத் அருள்சாமி ஆகியோரும் கலந்து கொண்டு மலையக மக்களின் தற்போதைய நிலைப்பாடுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

இதன்போது மனோ கணேசன் எம்.பி. முன்வைத்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

### கட்டமைப்பு சார்ந்த புறக்கணிப்பு

மலையகத் தமிழ்ச் சமூகம் தொடர்ச்சியாகக் கட்டமைப்பு ரீதியான புறக்கணிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றது.

நாட்டின் பிரதான ஏற்றுமதி வருமானத்தைப்பெற்றுக்கொடுத்துதேசியபொருளாதாரத்தைத் தாங்கி நின்ற போதிலும், நிலமின்மை, வறுமை மற்றும் பொருளாதாரச் சமத்துவமின்மை போன்ற பிரச்சினைகள் அம்மக்களைத் தொடர்ந்தும் வாட்டி வதைக்கின்றன.

### அரசின் மௌனம்

தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் மலையகப் பிராந்தியத்தின் நீண்டகால வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டுள்ளமை குறித்துப் பலமுறை சுட்டிக்காட்டியும், இது தொடர்பான பேச்சுகளுக்கு இலங்கை அரசு தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றது.

### வீடமைப்புத் திட்டத்தில் பாரபட்சம்

அண்மையில் நிலவிய சீரற்ற கால நிலையால் இடம்பெயர்ந்த மலையகக் குடும்பங்கள், அரசின் தேசிய வீடமைப்புத் திட்டத்தில் இருந்து திட்டமிட்டு விலக்கப்பட்டுள்ளனர்.

"அரசின் பொதுவான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுக்கு 5 மில்லியன் ரூபா வழங்கப்படுகின்றது. ஆனால், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் அந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படாமல், இந்திய நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் 2.7 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இது அப்பட்டமான பாரபட்சமாகும்." - என்றும் மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் சர்வதேச சமூகத்தின், குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலையீடு மற்றும் கண்காணிப்பு அவசியம் என்பதையும் தூதுக்குழுவினரிடம் அவர் இதன்போது வலியுறுத்தினார்.

# யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதுவருடன் சிறீதரன் எம்.பி. தலைமையிலான குழுவினர் சந்திப்பு

## மீனவர் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையிலான குழுவினருக்கும், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதுவர்சாய்முரளிக்கும்இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில், இந்திய இழுவைமடிப் படகு மீனவர்களால் நயினாதீவு மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தும், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் பற்றியும் இந்திய துணைத் தூதுவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்திய அரசின் நிதியுதவியுடன் நயினாதீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சூரியகல மின் உற்பத்தித் திட்டம், அதனுடன் தொடர்புடைய வீதி அபிவிருத்தி, வங்களாவடி மற்றும் துறைமுக



அபிவிருத்திகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார், உப தவிசாளர் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செல்லப்பா பார்த்தீபன், மங்களேஸ்வரன் கார்த்தீபன், நயினாதீவு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.






# மக்களுக்காகத்தான் நீங்கள் உங்களுக்காக மக்கள் இல்லை

## புதிய உத்தியோகத்தர்களுக்கு ஆளுநர் வேதநாயகன் அறிவுரை

“மக்களுக்கான சேவையை நீங்கள் சிறப்பாகச் செய்தால் அவர்கள் மனதில் நீங்கள் நிச்சயம் இடம்பிடிப்பீர்கள். அவர்கள்தான் உங்களை மதிப்பிடுபவர்கள் – கண்காணிப்பவர்கள். உங்களிடம் வந்தால் சேவையை திருப்தியுடன் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம் மக்களிடம் உருவாகும் வகையில் உங்கள் சேவை அமையும் என நான் நம்புகின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 114 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, நேற்று வியாழக்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆளுநர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

“கடந்த காலங்களை நாம் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். வாக்கு வங்கிகளை நிரப்புவதற்காக, “ஆட்களுக்கு வேலை” என்ற அடிப்படையில், கண்மண் தெரியாமல் நியமனங்கள் வழங்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. தேவை இருக்கிறதோ இல்லையோ, அரசியல் காரணங்களுக்காக அரச துறை வீங்க வைக்கப்பட்டது.

ஆனால், இன்று காலம் மாறியிருக்கின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான தற்போதைய அரசு, “வேலைக்கு ஆட்கள்” என்ற புதிய, நேர்மையான கொள்கையை முன்னெடுத்து வருகின்றது. அதாவது, எங்கு தேவை இருக்கின்றதோ, அங்கு மட்டுமே தகுதியானவர்கள் நிரப்பப்படுகின்றார்கள்.

கடந்த ஆண்டில் நாம் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் அனுமதியைப் பெற்றுப் பல ஆட்சேர்ப்புக்களை நடத்தியிருந்தோம். ஆனால், கவலைக்குரிய விடயம் என்னவென்றால், யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட பலர், அந்தப் பொறுப்பை ஏற்க மறுத்து வேலையை விட்டுச் சென்றுவிட்டனர். இது மிகவும் தவறான ஒரு செயற்பாடு.

மக்களுக்கு எங்கு தேவைப்பாடு இருக்கின்றதோ, அங்கு சென்றுதான் நீங்கள் பணியாற்ற வேண்டும். “மக்களுக்காகத்தான் உங்கள் பணியே தவிர, உங்கள் பணிக்காக மக்கள் இல்லை” என்பதை ஆணித்தரமாகப் புரிந்துகொள்ளுங்கள்.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களாக இணையும் உங்களுக்கு, அரச சேவையில் மிகப்பிரகாசமான எதிர்காலம் உண்டு. அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்காத பல பதவி உயர்வு வாய்ப்புகளும், நிர்வாகத் துறையில் மேல் நோக்கிச் செல்வதற்கான கதவுகளும் உங்களுக்குத் திறந்தே இருக்கின்றன.

“அரச வேலை கிடைத்துவிட்டது, இனி வாழ்நாள் முழுவதும் ஓய்வாக இருக்கலாம், இறுதியில் ஓய்வூதியம் எடுக்கலாம்” என்ற மனநிலையுடன் யாராவது இங்கு வந்திருந்தால், அந்த எண்ணத்தை இப்போதே அழித்துவிடுங்கள். இது ஓய்வெடுப்பதற்கான இடமல்ல இது ஓயாது உழைப்பதற்கான களம்.

நீங்கள் அமரப்போகும் கதிரைக்கு எதிரே, ஒருசேவையைப்பெற்றுக்கொள்ள வரும் பொதுமகன் அமரும்போது, “அந்தக் கதிரையில் இருப்பது நான்தான்” என்று ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். ஒரு வேலை தாமதமானால், அல்லது நியாயமான ஒரு சேவை மறுக்கப்பட்டால், உங்களுக்கு எவ்வளவு வலிக்குமோ, அதே வலிதான் உங்களை நாடி வரும் அந்த ஏழைக்கும் இருக்கும். அந்தத் தாமதத்தை, அந்த வலியை ஒருபோதும் நீங்கள் கொடுக்காதீர்கள்.

இன்று பணிக்குச் செல்லும் உங்களிடம் நான் எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். எங்கள் மக்களுக்கு உங்களின் சேவையை உச்ச அளவில் வழங்குங்கள். இந்த மக்களின் வரிப்பணத்தில்தான் நமக்குச் சம்பளம் கிடைக்கிறது என்பதை மறவாதீர்கள். “மக்கள் சேவையே மகேசன் சேவை“ என்பதை வெறும் வார்த்தையாக அல்லாமல், உங்கள் வாழ்க்கையாக மாற்றிக்கொள்ளுங்கள்.

உங்களை நாடி வரும் ஏழைக்கு நீங்கள் வழங்கும் தரமான – விரைவான சேவையால் அந்த முகத்தில் புன்சிரிப்பு வருமானால் அதுவே உச்சமானது. உங்கள் சிறப்பான சேவையால், “இந்த அலுவலர் எனக்கு வேண்டும்” எனத் திணைக்களத் தலைவர்கள் உங்களை விரும்பிக் கேட்கும் ஒருவராக நீங்கள் இருக்க வேண்டும்.

உங்களுக்கு உங்கள் சேவையை வினைத்திறனாகச் செய்வதற்குத் தொடர் பயிற்சிகளை நாங்கள் வழங்குவோம். அதைப் பயன்படுத்தி உங்களையும் நீங்கள் வளப்படுத்தி, எங்கள் மக்களுக்குத் தரமான சேவையை வழங்க வேண்டும்.

நாங்கள் வடக்கு மாகாணத்தில் பல ஆயிரக்கணக்கான ஆளணிப் பற்றாக்குறையுடன்தான் இயங்கி வருகின்றோம். ஆளணி பற்றாக்குறை இருக்கத்தக்கதாகவே எமது மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு சதமும் திரும்பி விடாமல் சிறப்பாகச் செயற்பட்டிருக்கின்றோம். இங்கிருக்கின்ற பணியாளர்களின் அர்ப்பணிப்பாலேயே அது சாத்தியமானது. பொதுச் சேவைக்கு இணைந்துள்ள நீங்கள் மக்களுக்காகக் கடமையாற்ற நேரம் காலம் பார்க்கக் கூடாது.

எமது மாகாணத்தின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எங்களுக்கு உதவிகளைப் புரிந்த அமைச்சர்களான இ.சந்திரசேகர் மற்றும் பிமல் ரத்நாயக்க ஆகிய இருவரையும் இந்த இடத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.”

– என்றார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தரம் III இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கு அமைவாக 7 ஆயிரத்து 510 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. அவர்களில் தகுதியான 5 ஆயிரத்து 500 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 125 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, அவர்களில் தகுதிபெற்ற 114 பேருக்கு இன்றைய தினம் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.றஜீவன், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகரனின் சார்பில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் சு.கபிலன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

65 வயது முடிகிறது. அதனால் மார்ச் 24ஆம் திகதி தாம் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கான அனுமதியை அவர் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடம் இருந்து பெற்று ஓய்வு பெறும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். அதற்கு இன்னமும் ஒன்றரை மாதம் கூட இல்லை. ஆயினும் கூட, அதற்கு முன்னர் அவரைப் பதவியில் இருந்து வெளியேற்ற கடைசி நேர முயற்சிகள் முழு மும்மரமாக நடக்கின்றன எனத் தெரிய வருகிறது.

கடந்த சுதந்திர தினத்தன்று – பெப்ரவரி நான்காம் திகதி – யாழ் பல்கலைக் கழகத்தில் தேசியக்கொடி பறக் கின்ற கம்பத்தில் கறுப்புக் கொடி ஏற்றப் பட்டது. அது பற்றிய செய்திகள் பரவலாக எல்லா ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன. அதனை வைத்து பேராசிரி யர் சிறிசற்குணராஜாவின் பதவிக்காலத் தின் இறுதியில் ஓர் அவல நாடகத்தை முன்னெடுக்க முயற்சிகள் நடப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

கடந்த வருடமும் இதே போல கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது. அதனோடு சம்பந்தப் பட்ட 6 பல்கலைக்கழக மாணவர்களின் பெயர், விவரங்கள், படங்களோடு புல னாய்வுத் தரப்பினரால் அரசுக்கு சமர்ப் பிக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது. அந்த விடயங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு ஊடாக துணைவேந்தர் சிறிசற்குணராஜாவுக்கு அனுப்பி அந்த ஆறு மாணவர்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர் பலவந் தப்படுத்தப்பட்டிருந்தார். அது தொடர் பில் பேராசிரியர் சிறிசற்குணராஜா உரிய விசாரணைகளை நடத்தினாராயினும் அது தொடர்பில் ஏதும் நடவடிக்கை எடுத் தார் எனத் தெரிய வரவில்லை. ஆறு மாணவர்களில் சிலர் இப்போது தங்கள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து விரிவுரை யாளர்களாகிவிட்டனர்.

போன வருடம் அனுப்பிய கடிதத்துக் கும் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை, அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று விளக்கம் கூறுவ தில் தொடங்கி, இப்போதும் இத்தகைய சம்பவங்கள் நடப்பதற்கு அனுமதித்து அசிரத்தையாக இருந்தீர்கள் என்று சுட்டிக்காட்டி, சிறிசற்குணராஜாவைப் பத வியிலிருந்து இடைநிறுத்தம் நகர்வு முன் னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அவருக்கு அழுத்தம் கொடுக்கும் அதிரடி உத்தரவுகள் அடுத்து வரும் நாள்களில் கொழும்பிலிருந்து வர கூடும் என சில வட்டாரங்கள் தெரிவித்தன.

பாவம் மனிதர், நீண்ட ஒரு கல்விச் சேவையின் பின்னர் திருப்தியோடும் மன நிறைவோடும் ஓய்வுக்கு செல்வதற்கு அனுமதிப்பதில்லை என சில வட்டாரங் கள் கம்பு சுற்றுகின்றன. அவற்றுக்கு வெற்றுத் திசை காட்டும் தரப்புக்கள் ஆத ரவாக இருப்பதால் எதுவும், எவ்வேளை யிலும் நடக்கலாம்...!

## எதிரணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் வலியுறுத் தியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சபாநாயகர், எப்போதும் நிலை யியற் கட்டளைகளுக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றார். ஆளுங்கட்சிக் குச் சார்பாக அவர் செயற்படுவதாகக் கூறுவது வடிகட்டிய பொய். நாடாளுமன் றத்தின் கௌரவத்தைச் சீர்குலைக்க எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கும் சதிகளின் ஓர் அங்கமே இந்தத் தார்மீகக் குற்றச் சாட்டுகள்.

எந்தவொரு தரப்பினரும் முறைப்பாடு செய்வதற்கு இந்நாட்டில் ஜனநாயக உரிமை உண்டு. அதற்காக விசாரணை கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே ஒருவர் பதவி விலக வேண்டும் எனக் கோருவது வேடிக்கையானது. சபாநாய கர் எதற்கும் அஞ்ச வேண்டிய அவசிய மில்லை. சட்ட ரீதியான விசாரணைகள் எவை முன்னெடுக்கப்பட்டாலும் அதனை எதிர்கொள்ள அவர் தயாராகவே உள்ளார்.

அரசமைப்புப் பேரவையின் தலைவ ராகச் சபாநாயகர் இருப்பதால் விசார ணைகள் பாதிக்கப்படும் என்பது தவறான வாதம். அந்தப் பேரவையில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர் என்பதை மரிக்கார் போன்றோர் மறந்து விடக் கூடாது. தனிப்பட்ட அரசியல் நோக் கங்களுக்காகச் சபாநாயகரின் பதவியைப் பறிக்க முயல்வதை அரசு ஒருபோதும் அனுமதிக்காது.” – என்றார்.

## சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இலங்கை அரசியல் வரலாற்றில் மிகச்சிறந்த முறையில் பணியாற்றிய சபாநாயகர்கள் பலர் இருந்துள்ளனர். ஆனால், தற்போதைய சபாநாயகர் மிக வும் மோசமான முறையில் ஆளுங்கட்சிக் குச் சார்பாகச் செயற்பட்டு வருகின்றார். நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாது காப்பதற்குப் பதிலாக, அவர் ஒருதலைப் பட்சமாகவே நடந்துகொள்கின்றார்.

சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன் றத்தின் பிரதிச் செயலாளர் ஒருவரே இலஞ்ச, ஊழல்விசாரணை ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்துள்ளார். இது பார தூரமான விடயமாகும். இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அர சமைப்புப் பேரவையின் ஊடாகவே நிய மிக்கப்படுகின்றனர். அந்தப் பேரவையின் தலைவராகச் சபாநாயகரே பதவி வகிக் கின்றார்.

தன்னால் நியமிக்கப்பட்ட உறுப்பி– னர்களைக் கொண்ட ஓர் ஆணைக்குழு, சபாநாயகருக்கு எதிராகச் சுயாதீனமான விசாரணையை முன்னெடுப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

எனவே, “சட்டம் அனைவருக்கும் சமம்” என்பது உண்மையானால், இந்த விசாரணைக்கு இடமளிக்கும் வகையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன பதவி விலக வேண்டும்.” – என்றார்.

## சி.ஐ.டியின் 4ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முகாமாகவே காணப்படுகின்றது என்றும், மனித குலத்துக்கு எதிரான வகையில் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை அரசு தயாரித்துள்ளது என்றும் முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதா வது:–

“1979 ஆம் ஆண்டில் அப்போதைய சூழலுக்குத் தேவையான ஒரு தற்காலிக ஏற்பாடாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் நீண்டகாலமாகப் பல்வேறு சித்திரவதை களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர்.

கொழும்புகுற்றப்புலனாய்வுத்திணைக் களத்தின் நான்காம் மாடிக்கு அழைத் துச் செல்லப்படும் சந்தேகநபர்கள் மிக வும் மோசமான முறையில் நடத்தப்படு கின்றார்கள். அங்கு அவர்களுக்கு அமர் வதற்கு ஒரு நாற்காலி கூட வழங்கப்படு வதில்லை. இன்றும் அத்தகைய மனிதா பிமானமற்ற சூழலே அங்கு நிலவுகின் றது. அந்த இடம் ஒரு சித்திரவதை முகாமா கவே மாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அர சைப் பாதுகாக்கும் நோக்கில், மனித குலத் துக்கு எதிரான புதிய சட்ட வரைவை அரசு தயாரித்துள்ளது. தற்போதைய பயங்கர வாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச்செய்துவிட்டு, மனிதநேயமிக்கஒரு புதிய சட்டத்தை உருவாக்குமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.” – என்றார்.




# யாழில் ஜனாதிபதியின் நிகழ்வுக்கு மக்களை ஏற்றி வர 63 பஸ்கள்!

## இன்னும் கொடுப்பனவு வழங்கப்படவில்லை





**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணத்தில் பொங்கல் தினத்தன்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் இடம் பெற்ற நிகழ்விற்கு மக்களை ஏற்றி இறக்கிய இ.போ.ச. பஸ்களுக்கான கொடுப்பனவுகள் இன்று வரையில் செலுத்தப்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் ஜனவரி மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற 'முழுநாடும் ஒன்றாக' என்னும் போதைப் பொருள் ஒழுப்பு தேசிய நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கலந்து கொண்ட போது அதில் பார்வையாளராக குடா நாடு முழுவதும் இருந்து மக்களை ஏற்றி வர இ.போ.சபை பஸ்கள் பயன்படுத் தப்பட்டன. இவ்வாறு பயன்படுத்தப்பட்ட பஸ்களுக்கு எவ்வளவு பணம் வழங் கப்பட்டது என போக்குவரத்துசாலை நிர்வாகத் தரப்பிடம் கோரப்பட்டது.

இதற்கான பணம் இதுவரை கிடைக்கவில்லை எனப் பதிலளிக்கப் பட்டது.

இதற்கான கொடுப்பனவு செலுத் தப்பட்டதா என மாவட்டச் செயலாள ரைத் தொடர்புகொண்டு கேட்ட போது அந்தப் பணிக்காக 63 பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. இருப்பினும் கொடுப்பனவு அனுமதி கோரப்பட்டுள் ளது. அனுமதி கிடைத்தவுடன் பணம் செலுத்தப்படும். – என்றார்.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-14, பொன்னப்பா ஒழுங்கை, 8 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் த.துரைராஜா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், கனடாவை சேர்ந்தவரும் இல.42, பண்டாரநாயக்கா மாவத்தை, கொழும்பு 12ல் தங்கியிருக்கும் கருணானந்தன் இந்திரன் என்பவர் 10.07.2025 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.காயத்திரி அகிலன் முகதாவில் 576ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடன உறுதி மூலம் இவ்வாதனம் தனது சித்தப்பாவான தம்பாப்பிள்ளை துரைராஜாவிற்கு 16.08.1948 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அம்பலவாணர் சிவகுருநாதன் முகதாவில் 51ம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி சொந்தமாகி குறித்த தம்பாப்பிள்ளை துரைராஜாவும் மனைவி பூமணியும் 1963 ஆம் ஆண்டளவில் தனது தாயாரான கருணானந்தன் பொன்மணிக்கு எழுதப்பட்டு தனது தாயார் அதில் வீடொன்றைக்கட்டி ஆண்டனுபவித்து பின்னர் 1966ம் ஆண்டளவில் தனக்கு நன்கொடையளித்திருந்தார் என்றும் எனினும் தனது பெயரில் நிறைவேற்றப்பட்ட உறுதி தொடர்பில் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் கிடைக்கப்பெறவில்லை எனவும் குறிப்பிட்டு பிரகடனம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த ஆதனத்தை, கருணானந்தன் இந்திரன் தனது அற்றோனித்தத்துவக்காரரான இல.659, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கருணனாதன் உருத்திரன் மறுநாமம் கருணானந்தன் உருத்திரன் மூலம் 28.07.2025ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.காயத்திரி அகிலன் முகதாவில் 4551ம் இலக்க அறுதி உறுதி மூலம் இல.8, பொன்னப்பா ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசையா சண்முகநாதனும் பெண் கனகாம்பிகைக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "ஆலடி" நிலப்பரப்பு 1 குளி 7.55. இது நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் 2025.07.09ம் திகதியிட்டு வரைந்த 6366ம் இலக்கப் படத்தில் துண்டு 1 ஆக காட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 7.55 உம் வீடும். இதற்கு எல்லைகள்,

கிழக்கு:- பொன்னப்பா வீதியும் கந்தசாமி தியாகநாதனின் ஆதனமும்
வடக்கு:- தியாகராசா தேவராசாவின் ஆதனம்
மேற்கு:- அருட்பிரகாசம் பெண் சகுந்தலாதேவியின் ஆதனம்
தெற்கு:- கந்தசாமி தியாகநாதனின் ஆதனமும் ஒழுங்கையும் இவ்வெல்லைப்படி இதடங்கலும் இதற்குரியவைகளும்.

தற்போது இராசையா சண்முகநாதனும் பெண் கனகாம்பிகையும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது இராசையா சண்முகநாதனும் பெண் கனகாம்பிகையும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

மாநகர முதல்வர்,
யாழ் மாநகர சபை.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொடை நடுங்கி அரசியல்

தேர்தல்களைக் கண்டு அஞ்சும் ஆட்சியாளர்கள் உருப்பட்டார்கள் என்று வரலாறு இல்லை. அத்தகையோர் நீண்ட காலம் அதிகாரத்தில் தாக்குப் பிடிக்க முடியாது. அதுவும் ஜனநாயக நாட்டில் மக்களின் வாக்குரிமைக்கு மதிப்பளிக்கத் தவறும் அதிகார வர்க்கம் தொடர்ந்து ஆட்சி கட்டில் நீடிப்பது கஷ்டமான காரியம்.

சரியோ, பிழையோ தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலில் தனித்துப் பெருவெற்றி என்ற நிலையைப் பெறவில்லை. இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் தொத்துப்பறியில்தான் அநுர குமார திஸநாயக்கவின் வெற்றி உறுதியானது. இலங்கையின் 47 வருட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையில் முதல் தடவையாக இரண்டாவது சுற்று வாக்கெடுப்பின் அடிப்படையில்தான் ஜனாதிபதியாகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஆனால் அதைத் தொடர்ந்து கிடைத்த நாடாளுமன்றத் தேர்தலின் பெருவெற்றி தேசிய மக்கள் சக்தியை எல்லையற்ற கனவுலகுக்கு இட்டு சென்றுவிட்டது.

ஆனால் குறுகிய காலத்தில் இடம் பெற்ற உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மக்கள் செல்வாக்கு தொடர்பான விவகாரத்தில் அவர்களின் பிடிமானம் யாது என்பதை அவர்களுக்கு நன்கு உணர்த்தி உள்ளது. அதனால் அவர்கள் வாக்கெடுப்பு என்ற சோதனை தொடர்பில் இப்போது அரண்டு போய் நிற்கிறார்கள். அதன் காரணமாகவே மாகாண சபை தேர்தல் தொடர்பில் ஆளாளுக்கு புரட்டிப் புரட்டிக் கதைக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் சட்ட சிக்கல்கள் இருக்கின்றன எனவும், எல்லை நிர்ணயப் பணிகள் காரணமாக இந்த ஆண்டிலும் தேர்தல் நடத்த முடியாது என்றும் நியாயம் கூறுகிறார்கள். தமக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருந்த போதிலும் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது என்றும், அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசித்த பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் மக்களின் காதில் பூச்சுற்றுகின்றது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

இந்த விவகாரங்கள் எல்லாம் புதிதாக வந்தவையோ, புதிதாகத் தோற்றம் பெற்றவையோ அல்ல. கடந்த பத்து ஆண்டுகளாக நீடிக்கும் நிலைமைகள் தான்.

ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஓராண்டுக்குள் மாகாண சபை தேர்தல் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் இரண்டையும் நடத்துவோம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்த போது இந்த பிரச்சினைகள் எல்லாம் இருந்தன. இந்தப் பிரச்சினைகளைக் காட்டித்தான் முன்னைய அரசுகளும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடித்தன. அப்போது இவற்றைத் தாண்டி மாகாணத் தேர்தலை நடத்த தேசிய மக்கள் சக்தியும் வற்புறுத்தியது. இந்த பிரச்சினைகளை எல்லாம் தாண்டி இந்தத் தேர்தலை நடத்துவதற்கான வழிமுறைகள் இருந்தமையும் - இருக்கின்றமையும் தேசிய மக்கள் சக்திக்கு நன்கு தெரியும். அவற்றை நம்பித்தான் ஆட்சிக்கு வந்தால் ஓராண்டுக்குள் தேர்தல் என்ற அந்த வாக்குறுதிகளை அது மக்கள் முன் வைத்தது.

ஆனால் இப்போது உள்ளூராட்சி தேர்தல்களில் மக்கள் கொடுத்த நெற்றியடி அவர்களுக்குப் பொறி கலங்க வைத்துவிட்டது. அதனால் இப்போது தேர்தலை தள்ளிப் போடுவதற்குப் பல தத்துவங்களை - காரணங்களை - வியாக்கியானங்களை - அள்ளி வீசுகிறார்கள்.

ஆடத் தெரியாதவன் மேடை சரியில்லை என்றானாம். அது போல தேர்தலை எதிர்கொள்ள அஞ்சுபவர்கள் தேர்தல் சட்டம் இல்லை என்று கதை விடுகிறார்கள். அவ்வளவுதான்.

ஜனநாயக நாட்டில் தேர்தல்களைக் கண்டு அஞ்சும் அரசியல் தலைமை உருப்பட்டதாக சரித்திரமே இல்லை. அதற்கு உதாரணத்திற்கு விலகிப் போய்த் தேட வேண்டியதில்லை. கடைசியாக இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நல்ல உதாரணம். தேர்தல்களைக் கண்டு பயந்து பயந்தே அவரது அரசியல் தலைமைத்துவம் நலிவுற்றுப் போனது. அந்தத் திசையில் பயணிக்க முயல்கிறது தேசிய மக்கள் சக்தி. மாகாண சபை தேர்தல் தொடர்பில் அதனுடைய தொடை நடுங்கித்தனம் அதனைத் தான் காட்டுகிறது.

# சண்முகதாசன் நினைவுப் பேருரை







கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசனின் 33 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஏற்பாடுசெய்திருந்த நிகழ்வில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பெ.முத்துலிங்கம், கம்யூனிஸ்ட் இயக்க முக்கியஸ்தர் எம். ஏ.சி. இக்பால் மற்றும் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றுகின்றமையையும், சட்டத்தரணியும் சமூக, அரசியல் செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கம் ‘ இலங்கை எதிர்நோக்கும் உள்நாட்டு மற்றும் புவிசார் அரசியல் சவால்கள் ‘ என்ற தலைப்பில் நினைவுப் பேருரையை நிகழ்த்துகின்றமையையும் கலந்து கொண்டோரையும் படத்தில் காண்கிறீர்கள்.

# புதுக்குடியிருப்பில் நேற்றுப் போக்குவரத்தின்போது வெற்றிலை மென்றோர்களின் மீது சட்ட நடவடிக்கை






**(பா.சதீசன்)**

வீதிகள், பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் வெற்றிலை மென்று துப்புபவர்களுக்கு எதிராக நேற்றையதினம் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர், பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஆகியோருடன் இணைந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே.கரிகாலன் தலைமையில் பொது இடங்கள், பொது போக்குவரத்தில் வெற்றிலை மென்று துப்புபவர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் திடீர் சோதனை நடவடிக்கையினை ஒன்றை நேற்றையதினம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நடவடிக்கையின் போது புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் பயணித்த பஸ், கார், ஓட்டோ மற்றும் ஏனைய வாகனங்களை வழி மறித்து பரிசோதனை மேற்கொண்டனர். இதன்போது வெற்றிலை மென்ற மூன்று நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் புதுக்குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியான முறையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, பொலிஸார் மற்றும் சுகாதார பரிசோதகர்களால் இணைந்து மேற்கொள்ளப்படும் என இதன் போது தெரிவிக்கப்பட்டது.




# புலம்பெயர் தமிழ் மக்களது செயற்பாடும் தாயகத்து தமிழ் மக்களின் நிலையும்...!

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலம்பெயர் தமிழ் மக்களின் பங்களிப்பு காத்திரமானது. தமிழ் மக்களின் அரசியல் மற்றும் ஆயுத ரீதியான போராட்டங்கள் இரண்டுக்கும் அவர்களது பொருளாதார ஆதரவும், புலம்பெயர் தேசங்களில் மேற்கொண்ட அழுத்தங்களும் தனி இடம் பெற்றிருந்தன. ஆனாலும் யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களது மனநிலை தொடர்பிலும், அவர்களது பொருளாதார நிலைமை தொடர்பிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் யுத்தப் பாதிப்பு, கொவிட் தாக்கம், பொருளாதார நெருக்கடி எனப் பலவற்றுக்கு முகம் கொடுத்து பொருளாதார ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டும் உள்ளார்கள். “பசி வந்தால் பத்தும் பறக்கும்” என்பது போல் அவர்களது மனநிலை மாற்றமடைந்து தென்னிலங்கை கட்சிகளின் பக்கம் திரும்பியமைக்கு அதுவும் ஒரு காரணம் என்பதை மறுத்து விட முடியாது.

யுத்தம் முடிவடைந்த பின்னும் பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பன வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறுகின்றன. ஆட்சியாளர்கள் மாறி மாறி வருகின்ற போதும் தமிழின அடக்கு முறை செயற்பாடும், இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடும் வேறுபட்ட வடிவங்களில் தொடந்து கொண்டே இருக்கின்றன. அதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் விதிவிலக்கல்ல. முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட கிவுல் ஓயாத் திட்டதை மேலும் பல மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கி நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கம் முயல்கிறது. அதனை தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் எதிர்க்கின்றன. ஆனால் அரசாங்கம் பல்வேறு சாக்குப் போக்குளைக் கூறி அதனை நடைமுறைபபடுத்த முயல்கிறது. அத்துடன் சட்ட விரோத தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரமும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஜனாதிபதி அஉரகுமார திஸநாயக்கா பதவிவேற்ற பின் இரண்டு சுந்திர தின நிகழ்வுகள் கடந்து விட்டன. ஆனால் தமிழ், சிங்கள, முஸ்லிம் என ஒட்டு மொத்த இலங்கை மக்களும் நாம் இலங்கையர் என்ற உணர்வுடன் சுதந்திர தினத்தை கொண்டாட முடியாத நிலையே தொடர்கின்றது. கடந்த இரு தேர்தல்களில் வடக்கு – கிழக்கில் கணிசமான வாக்குகளை இந்த அரசாங்கம் பெற்ற போதும் அந்த மக்களின் மனநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை மறுத்து விடவும் முடியாது. தெற்கில் சுதந்திர தினக் கொண்டாட்டமும், வடக்கு – கிழக்கு பகுதியில் கரிநாள் போராட்டமும் இடம்பெற்றுள்ளன. அது போன்று தமிழ் மக்கள் இன்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரியும், அரசியல் கைதிகளின் விடுதலை கோரியும், காணி விடுவிப்பு கோரியும், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரியும், அரசியல் தீர்வு கோரியும், பௌத்தமயமாக்கலுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் போராட்டங்களை அவவப் போது முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் அதில் மக்கள் திரட்சி என்பது குறைந்து செல்வதையும் காணக் கூடியதாக வுள்ளது.அதற்கு மக்கள் அரசாங்கம் பக்கம் சென்று விட்டார்கள் என்பது அர்த்தமல்ல. மக்களது பொருளாதார சுமையும், தமிழ் அரசியல் தலைமைகளின் செயற்பாடும் மக்கள் திரட்சியை குறைத்திருக்கின்றன.

ஆனால் இத்தகைய போராட்டங்களை வலுப்படுத்தும் வகையிலும் இராஜதந்திர அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையிலும் புலம் பெயர் தமிழர்களால் குறிப்பாக லண்டன், கனடா, சுவிஸ், பிரான்ஸ்,பெல்ஜியம்,மொறிசியஸ்,அவுஸ்ரேலியா

தொடர்ச்சி▼






# புலம்பெயர் தமிழ் மக்களது செயற்பாடும் தாயகத்து தமிழ் மக்களின் நிலையும்...!

தொடர்ச்சி▲

என பல நாடுகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. இது புலத்திலும் தமழ் மக்களது குரல் வலுவாக இருப்பதை வெளிப்படுத்தி இருந்தாலும், அத்தகைய போராட்டங்களுடன் புலம் பெயர் தமிழ் மக்களின் பங்களிப்பு முடிந்து விடுகின்றதா என்ற கேள்வி வலுவாக மக்கள் மத்தியில் எழுந்திருக்கினறது.




தாயகத்தில் தமிழ் தலைமைகளின் செயற்பாடும், தமிழ் தேசிய கட்சிகளின் ஒற்றுமையின்மையும், தேசியத்திற்கான அவர்களது மனநிலையில் மாறுபட்டுள்ளன. அவர்களை ஒழுங்கமைத்து, ஒற்றுமைப்படுத்தி, தமிழ் மக்களின் நிரந்த தீர்வுக்காக வழிப்படுத்த வேண்டிய அழுத்தங்களை புலம்பெயர் தமிழ் மக்களும், புலம் பெயர் தமிழ் அமைப்புக்களும் கொடுக்க வேண்டும். ஆனால், அத்தகைய ஓர் அழுத்தம் அங்கிருந்து முழுமையாகக் கிடைப்பதாக இல்லை. ஒவ்வொருருடைய செயற்பாடும் சில அரசியல் கட்சிகளுக்கான ஆதரவு நிலையோடு முடிந்து விடுகின்றதே தவிர ஒற்றுமையை வலியுறுத்துவதாக இல்லை.

மறுபுறம், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அவர்களின் பங்களிப்பு அவசியம். ஆனால் அவர்கள் அதை உணர்ந்து செயற்படுகின்றார்களா எனற கேள்வி எழுகிறது. ஒரு சில புலம் பெயர் தமிழ் மக்களின் அமைப்புக்கள், பல் தேசிய கம்பனிகள் தவிர ஏனையவை தமிழ் மக்கள் மத்தியில் வேலை வாய்ப்பை வழஙகவோ முதலீடுகளை மேற்கொள்ளவோ முன்வந்தவையாக இல்லை. புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களது உதவிகள் கூட பெரும்பாலும் அவர்களது உறவினர்கள், நண்பர்கள் வட்டத்துடனேயே முடிந்து விடுகின்றன. பாதிப்புக்கள் ஏற்படும் போது சிலர் உதவி செய்தாலும் மக்களின் பொருளாதார மீட்சிக்கு அவர்களின் பங்களிப்புப் போதாது. அவ்வாறான ஒரு பங்களிப்பை வழங்குவதன் மூலம் மக்களை பொருளாதார சுமையில் இருந்து மீட்டு மீண்டும் தமிழ் மக்களது அரசியல் உரிமைப் போராட்டத்தில் திரட்சியை ஏற்படுத்த முடியும்.

அரசியல் ரீதியாக ஜனநாயகப் போராட்டக்களுடன் புலம்யெர் தமிழ் மக்கள் நின்றுவிடாது, பொருளாதா எழுச்சிக்கும் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும். அதன் மூலமே தமிழ் மக்கள் மத்தியில் மீள் எழுச்சியையும், தமிழ் தேசியம் நோக்கிய திரட்சியையும் ஏற்படுத்த முடியும். அதில் புலம் பெயர் மக்களின் பங்களிப்பு காத்திரமானதாக இருக்க வேண்டும். ஆனால், புலம்பெயர் அமைப்புக்கள் மீதான அரசாங்கத்தின் தடையும், புலம் பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் மீதான அரசாங்கத்தின் தடையும் அவர்களது உதவிகளை தடுத்து உள்ளன. அரசாங்கம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீள கட்டியெழுப்ப புலம் பெயர் மக்களது ஒத்துழைப்பையும், தமிழர் தாயகப் பிரதேசத்தில பெற வேண்டும். அதற்கு அவர்கள் மீதான தடைகள் அகற்றப்பட வேண்டும். இதை அரசாங்கம் உணர்ந்து செயற்பட வேண்டும். மறுபுறம் தமிழ் மக்களது மீட்சிக்கும் உதவ புலம்பெயர் தமிழ் மக்கள் முன்வர வேண்டும். இதன் மூலமே தமிழ் தேசிய உரிமை அரசியலை முன்நகர்த்த முடியும் என்பதே உண்மை.


- கி.வசந்தரூபன் -

# ரி-20 உலகக் கிண்ணத்தில் இந்தியாவின் 10ஆவது வெற்றி

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் தொடர்ந்து 10ஆவது வெற்றியைப் பதிவு செய்து சாதனை படைத்துள்ளது இந்தியா.

இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்றுவரும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று பகல் – இரவு ஆட்டமாக நடைபெற்ற நமீபியாவுடனான போட்டியில் இந்திய அணி அபார வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 209 ஓட்டங்களைக் குவித்தது. இஷான் கிஷன் அதிரடியாக ஆடி 24 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்தார். பாண்டியா 28 பந்துகளில் 52 ஓட்டங்களைக் குவித்தார்.

நமீபியா சார்பாக பந்துவீச்சில் ஜெர்ஹார்ட் எராமஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் 210 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் நமீபியா களமிறங்கியது. ஸ்டீன் கேம்ப் 29 ஓட்டங்களும், ஜேன் பிரிலிங்க் 22 ஓட்டங்களும் சேர்த்தனர். ஏனைய வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

இறுதியில், நமீபியா 18.2 ஓவர்களில் 116 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதன்மூலம் 93 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில் வருண் சக்கரவர்த்தி 3 விக்கெட்டுகளையும், பாண்டியா, அக்சர் படேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக பாண்டியா தெரிவானார்.

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் இந்திய அணி 'ஏ' பிரிவில் 4 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது.

அதேவேளை, ஆண்களுக்கான ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து 10 போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் அணியாகவும் இந்திய அணி இடம்பிடித்துள்ளது.

2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ந்து 8 போட்டிகளிலும், அதன் தொடர்ச்சியாக நடப்புத் தொடரில் இரு போட்டிகளிலும் இந்தி அணி பெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் புதிய சாதனை

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் தொடர்ந்து 10 வெற்றிகள்



| | | | | |
|---|---|---|---|---|
| எதிரணி-அயர்லாந்து<br>2024<br>8 விக்கெட்டுகளால்<br>வெற்றி | எதிரணி-பாக்<br>2024<br>6 ஓட்டங்களால்<br>வெற்றி | எதிரணி-ஐ.அமெ.<br>2024<br>7 விக்கெட்டுகளால்<br>வெற்றி | எதிரணி-ஆப்கான்<br>2024<br>47 ஓட்டங்களால்<br>வெற்றி | எதிரணி-ப.தே.<br>2024<br>50 ஓட்டங்களால்<br>வெற்றி |
| எதிரணி-ஆஸி.<br>2024<br>24 ஓட்டங்களால்<br>வெற்றி | எதிரணி-இங்.<br>2024<br>68 ஓட்டங்களால்<br>வெற்றி | எதிரணி-தெ.ஆ.<br>2024<br>7 ஓட்டங்களால்<br>வெற்றி | எதிரணி-ஐ.அமெ.<br>2026<br>29 ஓட்டங்களால்<br>வெற்றி | எதிரணி-நமீபியா<br>2026<br>93 ஓட்டங்களால்<br>வெற்றி |

## ரி-20: நேற்றைய போட்டிகளின் முடிவுகள்

**இலங்கை - ஓமான்**
225/5 120/9
105 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

**நேபாளம் - இத்தாலி**
123 124/0
44 விக்கெட்டுகளால் இத்தாலி வெற்றி

**இந்தியா - நமீபியா**
209/9 116
93 ஓட்டங்களால் இந்தியா வெற்றி

## ரி-20 உலகக் கிண்ணம்: அணிகளின் நிலை - 12.02.2026

**குழு - ஏ**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 3.050 |
| 2 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.932 |
| 3 | நெதர்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.356 |
| 4 | ஐ.அமெரிக்கா | 2 | 0 | 2 | - | - | - | -1.525 |
| 5 | நமீபியா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.884 |

**குழு - பி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 3.125 |
| 2 | ஆஸ்திரேலியா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 3.350 |
| 3 | சிம்பாப்வே | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 2.702 |
| 4 | அயர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.175 |
| 5 | ஓமன் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -4.306 |

**குழு - சி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மே.இ.தீவுகள் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.625 |
| 2 | ஸ்கொட்லாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.950 |
| 3 | இத்தாலி | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.352 |
| 4 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.650 |
| 5 | நேபாளம் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.854 |

**குழு - டி**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 2 | 2 | 2 | 0 | 0 | 4 | 1.919 |
| 2 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.425 |
| 3 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -0.555 |
| 4 | ஐ.அ.இராச்சியம் | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.763 |
| 5 | கனடா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -2.850 |

போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, ச-சமனிலை மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி



# ‘பீட்ஷா’ உணவகத்தில் வேலை செய்துகொண்டு

# இத்தாலிக்காக கிரிக்கெட் ஆடும் இலங்கையர்

இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்று வரும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இத்தாலி அணிக்காக விளையாடி அசத்தி வரும் கிறிஷான் களுகமகே, இலங்கையைச் சேர்ந்தவ ராவார்.

நேற்று மாலை நடைபெற்ற நேபாளத்துக்கு எதிரான ஆட்டத்தில் இத்தாலி அணியின் பந்து வீச்சாளராகப் பிரகாசித்தவர் கிறிஷான் களுகமகே.

இந்த ஆட்டத்தில் 3 விக்கெட்டுகளைச் சாய்த்து, ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

இத்தாலியின் டஸ்கனி பகுதியில் உள்ள லூக்கா (Lucca) நகரில் பீட்ஷா உணவகத்தில் வேலை செய்து வரும் இவர், தமது பெரும்பாலான நேரத்தை அங்கேயே கழித்துவருகின்றார். ஓய்வு நேரங்களில் மாத்திரம் ரோம் நகரின் ஆஸ்ட்ரோடர்ப் மைதானங் களில் தமது லெக்ஸ்பின் (Leg-spin) பந்துவீச்சை மெருகேற்றுவார்.

கிரிக்கெட் மீதான அவரது தீராத காதலும், விடா முயற்சியும் இன்று அவரை 2026 ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இத்தாலி அணிக்காக விளை யாடும் நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இலங்கையின் நீர்கொழும்பில் பிறந்தவர் கிறி ஷான் களுகமகே. சிறுவயதில் தமது தாத்தாவு டன் வானொலியில் கிரிக்கெட் வர்ணனைகளைக் கேட்பதுதான் இவரது பொழுதுபோக்காக இருந் துள்ளது.

இந்நிலையில், 2007இல் (சுமார் 16 வயதில்) இவரது பெற்றோர் வேலை நிமிர்த்தம் இத்தாலிக் குச் சென்றனர். இதனால் தமது கிரிக்கெட் கனவு முடிந்துவிடும் என்று அவர் கலங்கியுள்ளார்.

இத்தாலியில் கிரிக்கெட் வசதிகள் இல்லாமையால், தடகளம் மற்றும் டென்னிஸ் பந்தில் கிரிக்கெட் விளையாடினார். பின்னர் லூக்காவில் உள்ள சிறிய கழகங்களில் விளையாடத் தொடங்கினார்.

2015-16இல் இத்தாலியின் பழமையான கழகங்களில் ஒன்றான ரோமா கிரிக்கெட் கழகத்தில் சேர்ந்தமை இவரது வாழ்க்கையில் ஒரு திருப்பமாக அமைந்துள்ளது.

ஆரம்பத்தில் வேகமாகப் பந்துவீசிய (Fast bowler) இவர், காயங்கள் காரணமாக 2021இல் ‘லெக்ஸ்பின்’னராக மாறினார்.

ஷேன் வோர்ண், வனிந்து ஹசரங்க மற்றும் ரஷீத் கான் ஆகியோரைத் தமது முன்மாதிரியாகக் கொண்டுள்ள இவர், ரஷீத் கானிடம் கூக்ளி (Googly) வீசவும் கற்றுக்கொண்டுள்ளார்.

திங்கள் முதல் சனி வரை பீட்ஷா உணவகத் தில் பணிபுரியும் இவர், ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலையிலேயே எழுந்து லூக்காவிலிருந்து ரோமிற்கு கிரிக்கெட் பயிற்சிக்குச் செல்வார். கிரிக் கெட்டிற்காகப் பல வேலைகளையும் இழந்துள்ளார்.

தற்போது இலங்கை மற்றும் இந்தியாவில் நடக்கும் இந்த உலகக் கிண்ணத் தொடரில் விளை யாடுவது, கிறிஷான் களுகமகேவுக்கு மிகவும் உணர்வுபூர்வமானதாக அமைந்துள்ளது.

அதுவும் தாய்நாடான இலங்கையில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவது அவருக்கு பெருமையாகவே அமைந்திருக்கும்.

அதேவேளை, கிரிக்கெட் போட்டியின் ஆரம்பத் தில், இத்தாலிய தேசிய கீதம் ஒலித்தபோது, தாம் அணிந்திருக்கும் சட்டையைக் கௌரவிக்க வேண்டும் என்ற பெருமிதம் தமக்கு ஏற்பட்டது,” எனத் தெரி வித்துள்ளார்.

கிறிஷான் களுகமகே ஒரு தீவிர இன்டர் மிலன் (Inter Milan) உதைபந்தாட்டக் கழகத்தின் தீவிர ரசிகர். கிறிஸ்டியன் வியேரி, அன்ட்ரியா பிர்லோ போன்ற இத்தாலிய உதைபந்தாட்ட நட்சத்திரங் கள் இத்தாலியின் கிரிக்கெட் அணிக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

தற்போது 34 வயதாகும் கிறிஷான் களுகமகே, உலகக் கிண்ணத் தொடருக்குப் பின்னர் கிரிக் கெட்டை முழுநேரத் தொழிலாக மாற்ற விருப்பம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த பாதையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதே தமது இலட்சியம் எனவும் தெரிவித்துள்ளார்.



# யானைகள் ரயிலில் மோதுவத்தை தடுப்பதற்கு வெப்ப உணர் கருவிகளை பொருத்த நடவடிக்கை

காட்டு யானைகள் ரயிலில் மோதி விபத்திற்குள்ளாகுவதை தடுப்பதற்காக ரயில்களில் வெப்ப உணர் கருவிகளை பொருத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றாடல் அமைச்சு மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியன இணைந்து இந்த திட்டத்தை முன்னெடுக்கின்றன.

இதன் முதற்கட்டமாக கொழும்பு கோட்டையிலிருந்து பொலன்னறுவை நோக்கி பயணிக்கும் ரயில்களில் வெப்ப உணர் கருவிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர், கலாநிதி தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

இது முன்னோடித் திட்டமாக குறிப்பிட்ட காலம் வரை பரிசோதிக்கப்பட்டு அதன் வெற்றியை அடுத்து அந்த மார்க்கத்தில் பயணிக்கும் ஏனைய ரயில் எஞ்சின்களிலும் பொருத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பிரித்தானியாவுக்கு கல்விகற்கச் செல்ல தயக்கம் காட்டும் இலங்கை மாணவர்கள்




பிரித்தானியாவில் கல்வி கற்கும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 - 2025 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பிரித்தானியாவில் பயிலும் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை 6வீதம் குறைந்து 685,565 ஆக பதிவாகியிருந்தது.

2025 இல் முடிவடைந்த ஆண்டில் வழங்கப்பட்ட கல்விக்கான விசாக்கள், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 31வீதம் குறைந்துள்ளன.

மாணவர்களுடன் வரும் குடும்ப உறுப்பினர்களுக்கான விசாக்கள் 57வீதம் என்ற அளவில் சரிவைக் கண்டுள்ளன.

இலங்கை மாணவர்களின் நிலையை பொறுத்தவரையில், பிரித்தானிய முதுகலை படிப்புகளுக்கான ஆர்வம் கடுமையாகக் குறைந்துள்ளது

இதன்படி, இலங்கையில் இருந்து பிரித்தானியாவில் முதுகலை மாணவர் சேர்க்கை 36 வீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

குறிப்பாக, மாணவர்களுடன் தங்கியிருக்கும் குடும்ப உறுப்பினர்களை அழைத்துச் செல்ல விதிக்கப்பட்ட தடையே இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக, இலங்கை மாணவர்கள் தற்போது கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளை நோக்கி செல்ல தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# சிறுவர் தொழிலாளர்களை ஒழிக்க கல்விச் சீர்திருத்தமே நிரந்தரத் தீர்வு

## மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு

சிறுவர் தொழிலாளர் முறைமையை இல்லாதொழிப்பதற்கு கல்வி சீர்திருத்தம் அவசியமென தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மொரோக்கோவில் நடைபெறும் 6ஆவது சிறுவர் தொழிலாளர் ஒழிப்பு உலகளாவிய மாநாட்டின் போது, பிரதி அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, தற்போதைய அரசாங்கம் புதிய கல்வி சீர்திருத்தங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், இலங்கையில் ஆண்டுதோறும் 10 இற்கும் குறைந்த சிறுவர் தொழிலாளர்கள் பதிவாகியுள்ளனர் என பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சிறுவர் தொழிலாளர் முறைமையை இல்லாதொழிப்பதற்காக, வீட்டு வருமானம் மற்றும் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் முதலீடு செய்தல் மற்றும் தரமான கல்விக்கான அணுகலை உறுதி செய்தல் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.










# நீண்டகால ஒத்துழைப்பு வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதி

இலங்கையின் அபிவிருத்தி செயல் முறைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என்று மீண்டும் உறுதியளித்துள்ளது.

பல ஆண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட வலுவான பங்காளித்துவத்தின் அடிப்படையில் இலங்கையுடனான உறவுகளை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்ப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின், உள்நாட்டுக்கான புதிய பணிப்பாளர் ஷானன் கவுலின் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஷானன் கவுலின், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போது இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட பகுதிகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவருதல் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.











# போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கான விரிவான திட்டம்

## ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டு

நாட்டின் போக்குவரத்துக் கட்டமைப்பை மிகவும் வினைத்திறன் மிக்க, பாதுகாப்பான மற்றும் நவீன தொழில்நுட்பத்துடனான போக்குவரத்துச் சேவையாக மாற்றி, பொதுமக்களுக்குக் கௌரவமான மற்றும் நம்பகமான சேவையைவழங்குவதற்காகமுழுப்போக்குவரத்து கட்டமைப்பிலும் விரைவான மாற்றம் ஏற்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்துத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக பொருளாதாரப் போட்டித்தன்மை, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, டிஜிட்டல் மாற்றம், சமூக சமத்துவம் மற்றும் பிரவேசம் மற்றும் பாதுகாப்பு ஆகிய 05 தூண்களின் கீழ் போக்குவரத்து அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ள மூலோபாயத் திட்டம் குறித்து இதன்போது ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

கொழும்பு நகரில் தற்போது நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக 'Lanka Metro Transit' பஸ் சேவையை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், இந்தத் திட்டத்தின் கீழ் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தற்போது தயார் செய்யப்பட்டு வருவதாகவும், இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குள் இதற்கான பஸ்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

கொழும்பைச் சுற்றியுள்ள 6 பிரதான வீதிகள் ஊடாக இந்தத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயற்படுத்தப்படவுள்ளதோடு, மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் பின்னர் காலி மற்றும் கண்டி மாவட்டங்களுக்கும், அடுத்த 03 ஆண்டுகளுக்குள் 08 பிரதான நகரங்களுக்கும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் கொழும்பு நகருக்கு நாளாந்தம் பிரவேசிக்கும் தனியார் வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைத்து, பயணிகளைப் பொதுப் போக்குவரத்தை நோக்கி ஈர்க்க எதிர்பார்க்கப்படுகிறது. பஸ்களுக்கான முன்னுரிமைப் பாதைகளை அடையாளம் காண்பதும், அவற்றின் வினைத்திறனைப் பேணுவதும் அவசியமானது என ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

பொதுமக்களுக்குத் தரமான சேவையை வழங்குவதற்காக, தற்போது ஒழுங்கீனமாகக் காணப்படும் பஸ் சேவைகளுக்குப் பதிலாக பஸ் நிறுவனங்கள் (கிளஸ்டர்- Clusters) முறையை நோக்கி நகர வேண்டும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சிறந்த போக்குவரத்துச் சேவை கிடைப்பதே மக்களின் தேவையெனவும் அது எந்த வகையில் கிடைக்கிறது என்பது அவர்களுக்கு முக்கியமல்ல எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நமது நகரங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை அல்ல. காலப்போக்கில் தாமாகவே உருவானவை என்பதால், தற்போதுள்ள நகரக் கட்டமைப்பிற்குள் போக்குவரத்து முகாமைத்துவத்தை மிகவும் அவதானமாக மேற்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, “பஸ் நிறுவனங்கள்” முறையை நிறுவுவதே இப்பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்த முறையின் கீழ், பஸ் உரிமையாளர்களின் பஸ்களை ஈடுபடுத்துவதற்காக ஒரு நிறுவனம் உருவாக்கப்படும் என்றும், அதில் லாபம் தொடர்பான பிரச்சினை எழுந்தால் அந்த நிறுவனத்திற்கு அரசாங்கத்தின் ஊடாகச் சலுகைகளை வழங்க முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன்போது பஸ் உரிமையாளருக்கும் நிறுவனத்திற்கும் இடையில் ஒரு ஒப்பந்தமும், அதேபோன்று சேவையைத் தொடர்ச்சியாக வழங்குவது தொடர்பாக அரசாங்கத்திற்கும் பஸ் நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றும் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். புதிய பஸ்களை இறக்குமதி செய்து பெருமளவு நிதியை செலவு செய்வதை விட இது எளிதான காரியமாக அமையும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.












# ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு

பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் கலந்துரையாடல் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவரும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சருமான சரோஜா சாவித்திரி போல்ராஜ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி செயலகத்தினால் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்கு பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் தற்போதைய பௌதிக ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டமையுடன், இதன்போது ஆணைக்குழு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வாய்ப்பும் கிடைத்தது.

இந்நிகழ்வில், பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் இணைப் பிரதித் தலைவர்களான சமிந்த்ராணி கிரியெல்ல, சமன்மலி குணசிங்க மற்றும் ஒன்றியத்தின் ஏனைய உறுப்பினர்களான ஹேமாலி வீரசேகர, லக்மாலி ஹேமச்சந்திர, நிலந்தி கொட்டஹச்சி, ஒஷானி உமங்கா ஆகியோர் பங்கேற்றதுடன், ஒன்றியத்தின் செயலாளர், இலங்கை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதி செயலகம், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.
















# தமிழ்நாட்டில் நீச்சல் போட்டிகளில் ஈழத்தமிழ் சிறுமி டிலாஜினி சாதனை

தமிழ்நாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் மாநில அளவில் நடத்தப்பட்ட 50 மீற்றர் நீச்சல் போட்டிகளில் ஈழத்தமிழ் சிறுமி ஜெ.டிலாஜினி மூன்று தங்கங்கள், ஒரு வெள்ளி பதக்கம் வென்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்து சாதனை படைத்துள்ளார்.

தமிழ்நாடு - தஞ்சாவூரில் கடந்த 07 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற மாநில அளவிலான நீச்சல் போட்டியில் கலந்துகொண்ட ஜெ.டிலாஜினி சாம்பியன் பட்டம் பெற்றார். 50 மீற்றர் பிறீ ஸ்டைல், பட்டர் பிளை, பக் ஸ்ரோக் ஆகிய தனி நபர் பிரிவுகளில் முதலிடம் பெற்று மூன்று தங்கப் பதக்கங்களை வென்று சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துள்ளார்.

இதேவேளை, திருச்சி மாவட்ட அணி சார்பில் 50 மீற்றர் தொடர் நீச்சல் போட்டியில் பங்கேற்று இரண்டாம் இடத்தை பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டில் அகதிகளாக வசித்து வரும் வல்வெட்டித்துறையை சேர்ந்த ஜெயக்குமார் - அருள்ஜோதி தம்பதியரின் பிள்ளைகளான தனுஜா, டிலாஜினி ஆகிய இருவரும் நீச்சல் போட்டிகளில் அபார திறமையை வெளிப்படுத்தி சாதனைகளை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# போதைப்பொருள் கடத்தல்காரரின் 2 கோடி ரூபா சொத்துக்கள் முடக்கம்



போதைப்பொருள் கடத்தல்காரரான "தீகல சமன்" என அழைக்கப்படும் மஹாமாலகே அஜித் பெரேராவின் 02 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சொத்துக்கள் போதைப் பொருள் கடத்தலால் ஈட்டப்பட்ட பணம் மூலம் கொள்வனவு செய்யப்பட்டவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிதி தூய்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டவிரோத சொத்து விசாரணை பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் இந்த சொத்துக்களை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.











# இந்துக் கல்லூரி கொழும்பில் இடம்பெற்ற தண்ணீர் சுத்திகரிப்பு நிலைய திறப்புவிழா

இந்துக்கல்லூரி கொழும்பின் 75 ஆவது ஆண்டு பவள விழா கொண்டாட்டங்களின் ஒரு அங்கமாக, மாணவர்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட மணித்தியாலத்திற்கு 500 லீற்றர் நீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட நவீன சுழு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்துக்கல்லூரி கொழும்பின் பழைய மாணவர் சங்கத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்தத் திட்டமானது சென்னை மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட “லைஃப் ஹெல்ப்” நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப் பட்டது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக தென்னிந்தியாவிற்கான இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி கணேசநாதன் கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக இந்திய லைஃப் ஹெல்ப் மையத்தின் திரு. பிளேஸ் கண்ணன் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பொறியியலாளர் ஏ. கே. அப்துல் ஜப்பார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கல்லூரி அதிபரின் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

1951 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையிலான கல்லூரியின் 75 ஆண்டுகால வரலாற்றில், மாணவர்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் இத்திட்டம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையப் பெற்றுள்ளது.

























# இந்துக் கல்லூரி கொழும்பின் பவளக் விழா கொண்டாட்டம்

இந்துக் கல்லூரி கொழும்பின் 75 ஆவது ஸ்தாபகர் தின பவள விழா கொண்டாட்டங்கள், நேற்று கல்லூரி வளாகத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

கல்லூரி அதிபர் இளையதம்பி இலங்கேஸ்வரன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு, மங்கல விளக்கேற்றலுடன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தொடங்கியது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.கே.கே.பி. ஆரியசிங்க கலந்து சிறப்பித்தார். கௌரவ விருந்தினராக கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலை அபிவிருத்திக் கிளைக் கல்விப் பணிப்பாளர் எஸ். பிரணவதாசன் கலந்து கொண்டனர்.

அத்துடன், பாடசாலையின் வளர்ச்சிக்குத் துணையாக நிற்கும் பல துறைசார் வல்லுநர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

விழாவின் தொடக்கத்தில் வரவேற்பு நடனம், பக்திப் பாடல்கள் மற்றும் ஸ்தாபகர் கீதம் ஆகியவை இசைக்கப்பட்டு விழா களைகட்டியது. இதனைத் தொடர்ந்து, கல்லூரியின் 75 ஆண்டு கால கல்விப் புரட்சியையும், சமூகத்திற்கு ஆற்றிய மகத்தான சேவையையும் வரலாற்றில் நிலைநிறுத்தும் வகையில், ஒரு விசேட நினைவுத் தபால் முத்திரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பாடசாலையின் பழைய மாணவரும் ஐ.டி.எம். நேசன் கெம்பஸின் தலைவருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன், கல்லூரியின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளுக்காக ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காசோலையினை பாடசாலை அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். தனதுதாய்நிறுவனத்திற்கு அவர் ஆற்றிய இந்த உதவி அங்கிருந்த அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றது.

மேலும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கல்லூரியின் செயல்பாடுகளை உலகெங்கும் வாழும் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளுடன் இணைக்கும் நோக்கில், புதிய உத்தியோகபூர்வ இணையதளமும் இதன்போது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதிநவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் தளத்தின் ஊடாக கல்லூரியின் வரலாறு மற்றும் சாதனைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.


இதனைத் தொடர்ந்து கல்லூரியின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முன்னாள் அதிபர்கள் மற்றும் பழைய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் வரலாற்றுப் பயணத்தைச் சித்தரிக்கும் இரண்டு ஆவணப்படங்களும் திரையிடப்பட்டன.

நிகழ்வின் இறுதியாக மாணவர்களின் கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் இசை நிகழ்ச்சி இடம்பெற்றதுடன், நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பவள விழா நிகழ்வில் பெருந்திரளான பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.













# சேலத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பிரசாரம் நுழைவுச் சீட்டு இருந்தால் மட்டுமே அனுமதி



சேலத்தில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டத்துக்கு நுழைவுச் சீட்டு இருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று அக்கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டி புறவழிச்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் மைதானத்தில் த.வெ.க தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முதலில் மக்கள் சந்திப்புக்கு அனுமதி கோரப்பட்ட நிலையில், மனுவில் வரைபடம் இணைக்கப்படவில்லை உள்ளிட்ட கேள்விகளை பொலிஸ் எழுப்பியிருந்தது.

இதையடுத்து, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு பதிலாக, குறிப்பிட்ட திகதியில் த.வெ.க நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்துக்கு த.வெ.க தரப்பில் அனுமதி கோரப்பட்டது.

இதையடுத்து, த.வெ.க நிர்வாகிகள் கூட்டத்துக்கு 51 நிபந்தனைகளுடன் பொலிஸ் அனுமதி வழங்கியது.

முக்கிய நிபந்தனையாக அதிகபட்சமாக 5,000 பேர் மட்டுமே கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று பொலிஸ் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், த.வெ.க. தலைமை நிலைய செயலகம் தொண்டர்களுக்கு முக்கிய அறிவுறுத்தலை நேற்று வெளியிட்டது.

# 39 ஆண்டுகளுக்கு பின் சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் நம்பிக்கையில்லா பிரேரணை



இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் 39 ஆண்டுகளுக்குப் பிறகு, சபாநாயகர் ஒருவரை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ளன.

இறுதியாக 1987 ஆம் ஆண்டில், சபாநாயகராக இருந்த பல்ராம் ஜாக்கருக்கு எதிராக இத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது, சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக காங்கிரஸ், திராவிட முன்னேற்ற கழகம், சமாஜ்வாடி உள்ளிட்ட "இந்தியா" கூட்டணியைச் சேர்ந்த சுமார் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு இந்த பிரேரணையை வழங்கியுள்ளனர்.

இதில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையின் மீது உரையாற்றும்பாது, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை முழுமையாகப் பேச அனுமதிக்காமல் ஒலிவாங்கி துண்டிக்கப்பட்டார் எனவும் அவர் குறிப்பிட்ட சில புத்தகக் குறிப்புகளை வாசிக்க அனுமதி மறுக்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

அதேநேரம், பிரதமர் நரேந்திர மோடியைத் தாக்க காங்கிரஸ் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சதி செய்தனர் என சபாநாயகர் ஓம் பிர்லா கூறிய கருத்து, சபையில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இது பெண் பிரதிநிதிகளை அவமதிக்கும் செயல் என எதிர்க்கட்சிகள் வாதிடுகின்றன.

அதேநேரம், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது தாராளமாக அனுமதி வழங்கும் சபாநாயகர், எதிர்க்கட்சிகள் முக்கியப் பிரச்சினைகளை எழுப்பும்போது சபையை ஒத்திவைப்பதாகவோ அல்லது உறுப்பினர்களை இடைநீக்கம் செய்கின்றார் என அந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 96 ஆவது பிரிவின்படி, சபாநாயகரைப் பதவியில் இருந்து நீக்கும் தீர்மானம் விவாதத்திற்கு வரும்போது, அவர் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து அவையை நடத்த முடியாது. ஆனால், அவர் அவையில் கலந்து கொண்டு தனது தரப்பு விளக்கத்தை அளிக்கலாம்.

பிரேரணை மீது வாக்கெடுப்பு நடக்கும்போது, அவர் ஒரு சாதாரண உறுப்பினராகத் தனது வாக்கைப் பதிவு செய்யலாம். ஆனால், வாக்குகள் சமநிலையில் இருக்கும்போது சபாநாயகருக்கு வழங்கப்படும் வாக்கு அவருக்கு வழங்கப்படாது.

இந்தத் தீர்மானம் நிறைவேற அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை ஆதரவு தேவை.

தற்போதைய அரசியல் சூழலில் ஆளுங்கட்சியான பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணிக்கு 293 உறுப்பினர்கள் உள்ளனர். தீர்மானம் நிறைவேற 272 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

எதிர்க்கட்சிகளிடம் சுமார் 234 உறுப்பினர்களே இருப்பதால், இந்தத் பிரேரணை வெற்றி பெறுவது கடினம்.

இருப்பினும், சபாநாயகரின் செயல்பாடுகளை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தவும், தார்மீக ரீதியாக அவருக்கு அழுத்தம் கொடுக்கவுமே எதிர்க்கட்சிகள் இந்த உத்தியைக் கையாண்டுள்ளன.







## ஈரான் விவகாரம்:

# ட்ரம்ப் - நெதன்யாகு சந்திப்பில் உடன்பாடு எட்டப்படவில்லை

ஈரான் விவகாரத்தில் அடுத்தகட்டமாக எவ்வாறு முன்னகர்ந்து செல்வது என்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோருக்கிடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

எனினும், இந்தச் சந்திப்பில் தீர்க்கமான தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்ப் மீண்டும் பதவியேற்றதன் பின்னர் இரு தலைவர்களும் நேரில் சந்திக்கும் 7 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஈரானின் அணுசக்தித் திட்டம் மாத்திரமன்றி, அதன் ஏவுகணைத் தளவாடங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அமெரிக்கா கடும் தூதரக அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என நெதன்யாகு இதன்போது வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நீடித்த இந்தச் சந்திப்பை "மிகச்சிறந்த சந்திப்பு" என ட்ரம்ப் வர்ணித்த போதிலும், நெதன்யாகுவின் கோரிக்கைகளை பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதைத் தவிர்த்துக்கொண்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்திப்பின் பின்னர் சமூக வலைதளத்தில் பதிவிட்ட ட்ரம்ப், ஈரானுடனான பேச்சுவார்த்தைகளைத் தொடரவே தான் விரும்புவதாகத் தெரிவித்தார்.

"ஈரானுடன் பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியுமானால் அதற்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை இஸ்ரேல் பிரதமரிடம் தெரிவித்துள்ளேன். ஒப்பந்தம் ஒன்று எட்டப்படாவிட்டால், அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்." என ட்ரம்ப் பதிவிட்டுள்ளார்.

மேலும், ஈரானுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தமும் அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் அற்ற ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில் தான்உறுதியாகஇருப்பதாகவும்ட்ரம்பவலியுறுத்தியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இம்ரான் கானுக்கு பார்வை இழப்பு; மருத்துவ குழு பரிசோதிக்க உத்தரவு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அடியாலா சிறையில் உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்படாததால் தனது வலது கண்ணின் பார்வையில் 85 சதவீதத்தை இழந்துள்ளார் என நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி சல்மான் சஃப்தார் சமர்ப்பித்துள்ள அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட சல்மான் சஃப்தார் சிறைக்குச் சென்று இம்ரான் கானை நேரில் சந்தித்து இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளதாக பாகிஸ்தானிய ஊடகங்கள் உட்பட ஒரு சில சர்வதேச ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

2025 ஒக்டோபர் வரை இரு கண்களிலும் சீரான பார்வை இருந்துள்ளது. அதன் பிறகு மங்கலான பார்வை குறித்து இம்ரான் கான் பலமுறை முறையிட்டும் சிறை அதிகாரிகள் அதனைப் பொருட்படுத்தவில்லை.

உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்காததால், வலது கண்ணில் முழுமையான பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது.

பின்னர் பரிசோதித்த நிபுணர்கள், கண்ணில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்தனர்.

தற்போது தீவிர சிகிச்சைக்குப் பின் வெறும் 15 சதவீத பார்வை மட்டுமே அவருக்கு எஞ்சியுள்ளது.

இம்ரான் கானைச் சந்தித்த போது அவர் மிகுந்த மனவேதனையுடன் காணப்பட்டார் எனவும் அவரது கண் எப்போதும் கண்ணீரால் நிறைந்திருந்ததாகவும் சல்மான் சஃப்தார் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

73 வயதாகும் இம்ரான் கானுக்குத் தேவையான வழக்கமான இரத்தப் பரிசோதனைகள் கூட நடத்தப்படவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் பல் மருத்துவப் பரிசோதனைக்குக் கோரிக்கை விடுத்தும் அது மறுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுகள் இருந்தும் அவரது சகோதரிகள் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

அண்மையில் சிறை அதிகாரி மாற்றப்பட்ட பின்னரே, வாரத்திற்கு ஒருமுறை 30 நிமிடங்கள் தனது மனைவியைச் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு முழுவதிலும் தனது மகன்களுடன் வெறும் இரண்டு முறை மட்டுமே அவர் தொலைபேசியில் பேச அனுமதிக்கப்பட்டுள்ளார் என சல்மான் சஃப்தார் குறிப்பிட்டுள்ளார்.

இம்ரான் கானின் உடல்நிலை மோசமடைந்து வருவதால், அவருக்கு உடனடியாகச் சிறப்பு கண் மருத்துவ நிபுணர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என சல்மான் சஃப்தார் பரிந்துரைத்துள்ளார்.

இதனையடுத்து, எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பாக இம்ரான் கானுக்கு விரிவான மருத்துவ பரிசோதனை நடத்த மருத்துவர்கள் அடங்கிய குழுவை அமைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம், தனது குழந்தைகளுடன் பேச அவர் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.02.2025




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுது போக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




புத்திசாலித்தனம் மற்றும் சம நிலை அணுகுமுறை வெற்றிக்கு வழி காட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.02.2025




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். திருப்தி உணர்வு காணப்படும்.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.

# வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் அத்துமீறி பல ஏக்கர் கணக்கான அரச காணி சுவீகரிப்பு



**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம் வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பல ஏக்கர் அரச காணி அத்துமீறி சுவீகரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி J/432 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்கள் விவசாயம் செய்துவந்த பல ஏக்கர் கணக்கான அரச காணி தனி நபர் ஒருவரால் அடாத்தாகச் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

எத அரச காணியில் வெற்றிலைக்கேணிப் பகுதியைச் சேர்ந்த பல விவசாயிகள் விவசாயம் செய்து வந்த நிலையில் தனி நபர் ஒருவர் அரச காணியை அத்துமீறி சுவீகரித்துள்ளமையால் அப்பகுதியில் விவசாயம் செய்துவந்த விவசாயி ஒருவரால் பிரதேச செயலாளரிடம் முறையிடப்பட்டது

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய அத்துமீறி அடைக்கப்பட்ட அந்தக் காணி அரசகாணி எனவும், நிலைமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கிராம சேவையாளருக்கு பிரதேச செயலர் உத்தரவிட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் பல ஏக்கர் வரையான அரச காணிகள் இவ்வாறு அத்துமீறி தனி நபர்களால் அடைக்கப்படுவதாக மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.